பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 16 | ஞாயிற்றுக்கிழமை | 03.12.2023 | அதிர்வு 124

## திருடர்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்தவரே ரணில்

### ஊழல்வாதிகளுக்கு எதிராக அவர் செயற்படமாட்டார் என்கிறார் ரஞ்சன்

ஊழல்வாதிகளின் வாக்குகளைப்பெற்று ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவால் ஊழல்வாதிகளுக்கு எதிராகச் செயற்பட முடியாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க 02▶

# காணாமல்போனோர் விவகாரம்: அடுத்த ஆண்டுக்குள் உரிய தீர்வு

## சபையில் நீதி அமைச்சர் அறிவிப்பு



“காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் 4 ஆயிரத்து 795 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முறைப்பாடுகள் தொடர்பான சகல விசாரணைகளையும் அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்து உறுதியான தீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள்ளோம்.”

- இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். 02▶

## ஈஸ்டர் தாக்குதலுக்கு எப்போது நீதி கிடைக்கும்?

“உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளையும், அவர்களைப் பாதுகாப்பவர்களையும் மக்கள் நன்கு அறிவார்கள்” – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024ஆம்

### சஜித் அணி எம்.பி. கேள்வி



ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் 05▶

## அச்சுவேலியில் கோர விபத்து இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

### இருவர் வைத்தியசாலையில்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலி – நாவற்காடு பகுதியில் இடம்பெற்ற 02▶

## நான் வீழ்வேன் என நினைத்தார்களோ?

### சபையில் மஹிந்த அணியை விளாசித் தள்ளிய மைத்திரி



“எனது கதையை முடிக்கும் நோக்கிலேயே மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத் தில் எனக்கு சுகாதார அமைச்சுப் பதவிவழங்கப்பட்டது” – என்று ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் தலைவரும் 05▶

## வாய்க்காலில் தவறி வீழ்ந்து நான்கு வயது சிறுமி மரணம்

### தம்பலகாமத்தில் சோகம்



(அப்துல்சலாம் யாசீம்)

மழை காரணமாக வீட்டுக்கு முன்பாக வாய்க்காலில் ஓடிய தண்ணீரில் வீழ்ந்து சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை, தம்பலகாமம் – முள்ளிப்பொத்தானை, 10 ஆம் கொலனியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

ரிஹால் அமல் ஹாஜர் எனும் 4 வயது 02▶



நான் சும்மா இருந்தாலும் பிரச்சினைகள் என்னை சும்மா விடுவதாக இல்லை. தேடி வருகின்றன. அவற்றை விட்டு நான் ஒதுங்கி இருக்கலாம் என்றாலும் அவை தள்ளிப் போக எண்ணுவதில்லை.

அப்படியான ஒன்றைப் பற்றித்தான் இன்று எழுதுகின்றேன்.

நேற்றுக் காலை தவற விடப்பட்ட அழைப்பு ஒன்று என் தொலைபேசியில் பதிவாகி இருந்தது. அந்த 05▶

## திருடர்களின் வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்ய வந்த போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

கிரிக்கெட் விவகாரத்தில் ஜனாதிபதி மக்கள் பக்கம் நிற்காமல் ஊழல்வாதிகளுக்கு ஆதரவாக நின்றார் என்றும் ரஞ்சன் ராமநாயக்க இதன்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அஜித் நிவார்ட் கப்ரால், பஸில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ எல்லாரும் திருடர்கள் என்று நான் கூறினேன். ஆனால், திருடர்கள் என்று கூறியவர் சிறையில் அடைக்கப்பட்டார். திருடர்கள் சுதந்திரமாக உலாவித் திரிகின்றனர். இன்று எனக்குக் குடிமையுரிமை இல்லை. ஆனால், நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியவர்களுக்குக் குடியுரிமை உண்டு." – என்றார்.

## வாய்க்காலில் தவறி வீழ்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்பள்ளிச் சிறுமியே உயிரிழந்துள்ளார்.

சிறுமி வாய்க்கால் வெள்ளத்தில் தவறி வீழ்ந்து அடித்துச் செல்லப்பட்ட நிலையில், வீதியால் புல் வெட்டச் சென்ற நபர் ஒருவர் சிறுமியின் சடலத்தை அவதானித்து அவரின் தந்தைக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

சிறுமியின் சடலம் மீட்கப்பட்டு கந்தளாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிம் ஒப்படைக்கப்பட்டது.

அல் அக்ஸா மையவாடியில் நேற்று ஜனாசா நல்லடக்கம் செய்யப்பட்டது.

## காணாமல்போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர், காணாமல்போனோர் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து மேலும் கூறுகையில்,

"காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்போது வினைத்திறனாக்கப்பட்டுள்ளன.

அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 62 முறைப்பாடுகள் தொடர்பில் மாத்திரமே கடந்த காலங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், புதிய நிர்வாகக் கட்டமைப்புடன் 4 ஆயிரத்து 795 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டுக்குள் அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்து ஒரு தீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள்ளோம்." – என்றார்.

## அச்சுவேலியில் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

புத்தூர் பகுதியைச் சேர்ந்த சிவநேசன் சியான் என்ற 22 வயது இளைஞரே உயிரிழந்தார்.

விற்பனை நிறுவன வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# ஒதியமலைப் படுகொலையின் 39 ஆம் ஆண்டு நினைவேந்தல்

## கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது






**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில் 1984 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஒதியமலை படுகொலையின் 39ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கொட்டும் மழைக்கு மத்தியிலும் பொலிஸாரின் கெடுபிடிகளுக்குள்ளும் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி அதிகாலை வேளையில் புகுந்த இராணுவத்தினரும், சிங்களக் காடையர்களும் அங்கிருந்த இளைஞர்கள் மற்றும் ஆண்களை சனசமூக நிலையத்திற்கு வரவழைத்து, அவர்களது ஆடைகளை களைந்து, அவற்றினால் அவர்களைக் கட்டிப் போட்ட பின்னர் 27 பேரை சுட்டும், வெட்டியும் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்திருந்தனர். அச்சமயம் 5 பேர் கடத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டனர் என உறவினர்கள் கருதுகின்றனர்.


இந்த ஒதியமலைப் படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று ஒதியமலை சனசமூகநிலைய வளாகத்தில் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் பொலிஸாரின் கெடுபிடிகளுக்குள்ளும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்களால் அவர்களுக்கான நினைவுச்சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மலர்வணக்கம் செலுத்தி நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது

நினைவேந்தல் நிகழ்வை தொடர்ந்து வழமை போல் ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மசாந்தி பூசையும் அன்னதான நிகழ்வும் இடம்பெற்றன.

நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பட்டார்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள்,கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வு வளாகத்திலும் ஆலய சூழலிலும் பொலிஸார்ச்மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள் படங்கள் எடுத்து மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்ப்பட்டடிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# பாதையில் கண்டெடுத்த பணம், நகையை பொலிஸில் ஒப்படைத்த இரு மாணவிகள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலையிலிருந்து வீடு செல்லும் வழியில் கண்டெடுத்த சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களையும், பணம் அடங்கிய கைப்பையையும் உரியவர்களிடம் கிடைக்கும் வகையில் மீகலேவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மீகலேவ மகாவலி தேசிய பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயிலும் நிசுறு யுவனிகா, சந்துணி நிமல்கா ஆகிய இரு மாணவிகளின் இவ்வாறான மனிதநேய செயற்பாட்டை பொலீஸ் நிலைய உத்தியோஸ்தர்கள், பிரதேசவாசிகள் பாராட்டியுள்ளமையோடு பாடசாலை அதிபர் மங்கலிகா வீரசேகர இந்த மாணவிகளின் முன்மாதிரியான செயற்பாடுகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்றையும் ஏற்பாடு செய்திருந்தார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலக்கத்துக்கு அழைப்பு எடுத்தேன். தமிழரசுக் கட்சியின் பிரமுகர் அவர். தெரிந்த நண்பர்.

அவர் ஒரு கேள்வி எழுப்பினார். காலையில் என் பத்தியை வாசித்து விட்டுத்தான் அந்தக் கேள்வி கோபத்துடன் அவரிடமிருந்து வந்தது.

“மாவைக்குக் கட்சிக்குள் பெருந்தலைவர் பதவி கொடுப்பது குறித்து யோசிக்கின்றார்கள் என்று எழுதி இருக்கின்றீர்கள் அல்லவா?”

“ஆம். அப்படித்தான் பேச்சு அடிபட்டது. அதைத்தான் எழுதினேன்.” – என்றேன் நான்.

“பெருந்தலைவர் என்றால் பெரும் மனிதத்தனமாக – கனவான் போல – நடந்து கொள்ள வேண்டும் அல்லவா? சிறுமைத்தனமாக நடப்பவரை எப்படி பெருந்தலைவராக ஏற்பது?” – என்று அவர் சீறினார்.

ஏதோ விடயம் தூண்டிலில் தேடி வந்து மாட்டுகின்றது என்று எண்ணிக் கொண்டு துருவினேன்.

“இன்று(நேற்று) பிற்பகல் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையின் கூட்டம். தொகுதிக் கிளை சார்பில் தேசிய மாநாட்டில் பங்கு பற்றி வாக்களிக்கவிருக்கும் பிரதிநிதிகள் தெரிவு இன்று. தந்தை செல்வாவின் தொகுதி இது. மூலக்கிளைகளின் பிரதிநிதிகள் தான் தொகுதிக் கிளைக் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டும். தெல்லிப்பளை மூலக்கிளையின் தலைவர் மற்றும் பிரதிநிதியான சுகிர்தனுக்கு (வலி. வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர்) அழைப்பு அனுப்பாமலேயே வேண்டுமென்றே ஓரம் கட்டி உள்ளார் தொகுதிக் கிளைத் தலைவர் மாவையர். மல்லாகம் மூலக் கிளையின் தலைவர் ஹரிகனுக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை. அவரும் அதே பிரதேச சபையில் உறுப்பினராக இரண்டு முறை பதவி வகித்தவர். தமிழரசு கட்சியின் முன்னணி இயங்குநிலை உறுப்பினர். ஓர் ஊடகவியலாளரும் கூட. தமிழரசுக் கட்சியின் மூத்த இயங்கு நிலை உறுப்பினர்கள், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் எல்லோரையும் வெட்டி விட்டுத் தொகுதிகளைக் கூட்டத்தை கூட்டுகின்றார் உங்களின் பெருந்தலைவர் மாவையர். இரண்டு காரணங்களுக்காக. ஒன்று – வலிகாமம் வடக்கில் தமது மகன் மேலெழுவதற்குக் கட்சிக்குள் தடையாக – இடைஞ்சலாக – உள்ளோரை கட்சிக்குள்ளேயே இடமளிக்காமல், வெட்டி, வெளியேற்றுவது. அடுத்தது – கட்சியின் தேசிய மாநாட்டில் தாம் காட்டுபவர்களுக்கு வாக்களிக்கக் கூடிய நம்பகரமானவர்களை மட்டுமே பிரதிநிதிகளாக தேர்ந்தெடுப்பதற்கு வசதியான சூழ்நிலையை ஏற்படுத்துவது. இந்த இரண்டுக்குமாகத்தான் கட்சியின் மூத்த –.அதிக ஈடுபாடு காட்டிச் செயற்படுகின்ற – உறுப்பினர்களை எல்லாம் வெட்டி விட்டு, நரித்தனமாகக் கூட்டம் நடத்துகின்றார் மாவையர். அவருக்குப் பெருந்தலைவர் பதவி கொடுக்க முனைவோர்கள் உண்மையில் சிறுமைத்தனத்துக்குத் துணை போகின்றார்கள்” என்றார் அந்த நண்பர்.

அவர் கூறிய தகவல்களை விசாரித்தேன். முற்றிலும் உண்மை.

நேற்று மாலை காங்கேசன்துறைத் தொகுதி கிளை கூட்டத்தில் இந்த விடயம் ஒலிக்காமல் இல்லை.

வலி. வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும், மாவையின் முன்னாள் ‘கையாளு’மான சுகிர்தனைக் கட்சி இடைநிறுத்தி இருப்பதாக அந்தக் கூட்டத்தில் பச்சை பொய் அவிழ்த்து விட்டார் மாவையர்.

ஹரிஹரன் குறித்து கேட்கப்பட்ட போது ‘ஏன், கூட்டம் பற்றிய செய்திகளை பேப்பரில் போடவா அவரை அழைப்பதற்கு?’ என்று ‘ஜனநாயகப் பண்புடன்’(?) பதில் கேள்வி எழுப்பி இருக்கிறார் மாவையர்.

இப்படிப்பட்டவர் பெருந்தலைவர் பதவிக்கு பொருத்தமானவரா என்று அந்த நண்பர் காலையில் எழுப்பிய கேள்வி சரிதான் என்று எனக்குப் பட்டது.

இதற்குள் இன்னொரு ஊடக நண்பர் நேற்று மதியம் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

“நீங்கள் கூறுவது போல மாவை சேனாதிராஜா கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிடவில்லை என்பது உண்மைதான். கட்சியில் அதிகாரம் உள்ள பதவி பொதுச்செயலாளர் பதவிதான். அதற்குத்தான் மாவை இம்முறை கண் வைத்திருக்கின்றார்” – என்றார் அவர்.

எனக்கு அந்தத் தகவல் ஒரு வகையில் திருப்தி. இன்னொரு வகையில் எரிச்சல்.

பெருந்தன்மை இல்லாதவர் பெருந்தலைவராகாவிட்டால் நல்லதுதானே என்ற திருப்தி. மாவைதான் கட்சியின் செயலாளர் என்றால், தமிழரசுக் கட்சி குறித்து இனிப் பேசாமல் விடுவது நல்லது என்ற எரிச்சல்தான் அடுத்தது.

தமிழரசு உருப்பட்ட மாதிரிதான். தமிழ் மக்களை மட்டும் அல்ல, அக்கட்சியையும் அதன் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வா கூறியமை போல கடவுள்தான் இனிக் காப்பாற்ற வேண்டும்...!

இன்னொரு கொசுறுத் தகவல்:–

கொஞ்சக் காலத்துக்கு முன்னர் தந்தை செல்வாவின் பேரன் (சந்திரகாசனின் மகன்) இளங்கோவை திருகோணமலையில் சம்பந்தன் தமிழரசுக் கட்சிக்குள் நுழைத்து, மேலே கொண்டு வரப் போகின்றார் என ஒரு பேச்சடிபட்டது. இப்போது அவரை தந்தை செல்வாவின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளை ஊடாகக் கொண்டு வருகிறார் மாவையர்.

பல எதிர்பார்ப்புகள் இந்த நகர்வுக்குப் பின்னால் இருக்கின்றன என்பது மட்டும் உண்மை. சந்தர்ப்பம் வரும் போது அவற்றைப் பார்ப்போம்.

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“நாட்டில் சட்டம் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் ஒருசிலர் சட்டத்தில் இருந்து விடுபடுகின்றார்கள். உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு நான்கரை ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை நீதி கிடைக்கவில்லை. உண்மை பகிரங்கப் படுத்தப்படவில்லை. எவரும் தண்டிக்கப் படவும் இல்லை.

2019ஆம் ஆண்டு அரசு உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலை முன்னிலைப்படுத்தியே ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவுடன் குற்றவாளிகளைத் தண்டிப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டது. ஆனால், இன்று வரை அந்த வாக்குறுதிகள் பொய்யாக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, தமது உறவுகள் ஏன் கொல்லப்பட்டார்கள் என்று பாதிக்கப்பட்ட எம் மக்கள் இன்றும் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. குண்டுத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, யாருக்காக நடத்தப்பட்டது என்பதையும், தற்போது அவர்களைப் பாதுகாப்பவர்களையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உட்பட தேசிய கத்தோலிக்க பேராயர்கள் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்கள். அந்தக் கடிதத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தக் கடிதத்தை சபைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

விசாரணைகளை முன்னெடுக்குமாறு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினருக்குப் பதவி உயர்வு வழங்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்டுள்ள எம் சமூகத்தினருக்கு எவ்வாறு நீதி கிடைக்கும்?.” – என்றார்.

## நான் வீழ்வேன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

“என்னை இல்லாமல் ஆக்கும் நோக்கிலேயே 2010 இல் எனக்கு சுகாதார அமைச்சு பதவி வழங்கப்பட்டது. ஆனால், எனக்கு அந்த அமைச்சுப் பதவி வழங்கப்பட்டதால்தான் ஜனாதிபதியாக முடிந்தது என்பதைத் தற்போதைய சுகாதார அமைச்சருக்கு நினைவுபடுத்துகின்றேன். என்னை முடிக்கப் பார்த்தனர். ஆனால், நான் விழித்துக்கொண்டேன்.

எனது ஆட்சிக் காலத்தில் பிடிக்கப்பட்ட போதைப்பொருட்கள் நீதிவான் முன்னிலையில் எரிக்கப்பட்டன. தற்போது கைப்பற்றப்படும் போதைப்பொருள்களுக்கு என்ன நடக்கின்றது என்பது தெரியவில்லை.

சுகாதார அமைச்சில் ஊழல், மோசடிகள் உள்ளன. விலைமனுகோரல்கூட முறையாக நடப்பதில்லை. ஊழல், மோசடி நிறுத்தப்பட வேண்டும்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதித்துறையின் சீத்துவம்

‘நீதியே இல்லாத நாட்டின் நீதி அமைச்சர் என்று சொல்லிக்கொள்ள உங்களுக்கு வெட்கமே இல்லையா?’ - என்று நேற்று நாடாளுமன்றத்தில் வைத்து நேரடியாக நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷவிடம் நாக்கைப் பிடுங்குமாற் போல கேள்வி எழுப்பி இருக்கின்றார் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

நீதி அமைச்சுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கேட்டிருக்கின்றார்.

எல்லாப் பக்கமும் நிலத்தினால் சூழப்பட்ட நாடு ஆப்கானிஸ்தான். அந்த நாட்டுக்கு கடல் எல்லையோ, துறைமுகங்களோ கிடையாது. அத்தகைய நாடு கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் அமைச்சர் என்று ஒருவரை நியமித்தால் அது எத்தகைய கேலிக்கூத்தோ அதே போன்றதுதான் நீதியே நிலவாத நாட்டுக்கு நீதி அமைச்சர் ஒருவர் இருக்கிறார் என கூறிக் கொள்ளும் கேலிக்கூத்தும் என்று கடுமையாகச் சாடியிருக்கின்றார் சுமந்திரன்.

மக்களின் நினைவேந்தல் உரிமைகளை - உரித்தை - பறிப்பது போல பொலிஸார் நீதிமன்றங்களில் விண்ணப்பிப்பதும், பொலிஸாருக்கும், ஆட்சிக்கும் பயந்து கொண்டு நீதிவான்கள் கட்டளைகள், உத்தரவுகளைக் கொடுப்பதும் வெவ்வேறு ஆள்களுக்கு வெவ்வேறு சட்டங்கள் பாகுபாடாகக் காட்டப்படுவதை உறுதிப்படுத்துகின்றன என்று சுமந்திரன் கடுமையாகச் சாடினார்.

இன மோதலை தூண்டும் வகையில் உரையாற்றினார் என்ற குற்றச்சாட்டில் போதகர் ஜெரோம் கைது செய்யப்பட்டு இருக்கின்றார். விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளார். ஆனால் மட்டக்களப்பில் சுமணரத்ன தேரர் தமிழர்களைத் துண்டு துண்டாக வெட்டுவேன் என்றுபகிரங்கமாக-வெளிப்படையாக-பேசுகின்றார். ஆனால் அவர் கைது செய்யப்படவில்லை. சட்டத்திலும் உயர்ந்த மனிதராக அவர் இந் நாட்டில் பார்க்கப்படுகின்றார் என்று சுமந்திரன் விமர்சித்தார்.

அது மாத்திரமல்ல, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாக முடிச்சு போட்டுக் கோர்த்துவிட்டும் இருக்கின்றார் அவர்.

“இங்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவர் பிரதமராக இருந்தபோது முன்னகர்த்தப்பட்டு நிறைவேற்றப்படாமல் போன - அப்போதைய நிலையில் 18 மற்றும் 19ஆம் திருத்தம் என குறிப்பிடப்பட்ட - ஒரு விடயத்தின் மீது உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் சாராம்சம் என்று ஒன்றை வாசித்தார். அது தவறு. அவர் வாசித்தவை 17 ஆம் அரசமைப்பு திருத்தம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பகுதிதான். அதைத் தவறுதலாக இங்கு சமர்ப்பித்தமை மட்டுமல்லாமல், அந்தச் சட்டமூலத்தை தானும், கரு ஜெயசூரியவும், கே.என்.சொக்ஸியும் அவசர அவசரமாகத் தயாரித்தோம் என்றும் கூறினார். அந்த வழக்கில் நானும் முன்னிலையாகி வாதாடினேன் என்றும் அவர் குறிப்பிட்டார். அதுவும் தவறு. அரசமைப்பின் 17 ஆம் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்ட காலத்தில் நான் இலங்கையில் இல்லை. வெளியில் பட்ட மேற்படிப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த 17ஆம் திருத்தம் ஜே.வி.பி. அழுத்தம் காரணமாக ஜனாதிபதி சந்திரிகாவினால் கொண்டுவரப்பட்டது. அதற்கும் ரணிலுக்கும் தொடர்பில்லை. அவர் கொண்டு வந்து பின்னர் இடையில் கைவிடப்பட்ட 18, 19ஆம் திருத்தங்களின் போது நான் நீதிமன்றத்தில் வாதிட்டேன். இன்றைய நீதி அமைச்சரும் வாதிட்டார். ரணில் விக்கிரமசிங்க இப்போது இங்கு வந்து தான் தயாரித்ததாக கூறும் அந்தச் சட்டமூலத்தைத்தான் விஜயதாஸ ராஜபக்ஷ நீதிமன்றத்தில் ‘இது என்ன மிக மோசமான ஆங்கிலம்? பிழையான மொழி. இத்தகைய மொழித் திறனற்ற வடிவம் நமது அரசமைப்பில் இருப்பது இழுக்கல்லவா?’ என்று நீதியரசர்களைப் பார்த்துக் கேட்டார்” - என்று நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் சுமந்திரன்.

இலங்கையில் நீதித்துறையின் பெருமையை நேற்று நாடாளுமன்றத்தில் கிழித்துத் தொங்க விட்டிருக்கின்றார் அவர் என்பது நிஜம்.

# மலைத்தொடரில் சிக்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள்

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக பல்கலைக்கழகமொன்றின் 180 மருத்துவபீட மாணவர்கள் ஹன்தான மலைத்தொடரில் சிக்கியுள்ளனர்.

இதில் 60 ஆண்களும், 120 பெண்களும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரும், இராணுவத்தினரும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மலைத்தொடரில் சிக்கியுள்ள மாணவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்த முடியவில்லை எனல் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# தமிழ்நாட்டில் 'மிக்ஜாம்' புயல் எச்சரிக்கை: பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிப்பு!



வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று இன்று 'மிக்ஜாம்' புயலாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் நாளை திங்கட்கிழமை தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் பாடசாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடங்கியதிலிருந்து தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இதற்கிடையே, தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது.

இது, இன்று தென்மேற்கு வங்கக் கடலில் புயலாகவும் மாறும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த புயல் சின்னத்திற்கு 'மிக்ஜாம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

மேலும், இது வடமேற்கு திசையில் நகர்ந்து டிசம்பர் 4 ஆம் திகதி அதிகாலை தெற்கு ஆந்திரா மற்றும் அதை ஒட்டிய வட தமிழக கடற்கரையை அடையும். அதன் பிறகு, 5 ஆம் திகதி அதிகாலையில் நெல்லூர் மற்றும் மசூலிப்பட்டினம் இடையே புயலாக மணிக்கு 80 முதல் 90 கிலோ மீற்றர் வேகத்தில் கரையைக் கடக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நாளை தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் எச்சரிக்கை காரணமாக மாணவர்களின் நலன் கருதி நாளை திங்கட்கிழமை ருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பாடசாலை , கல்லூரிகளுக்கு ஏற்கனவே விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், திருவள்ளூரை தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்டத்திலும் புயல் எச்சரிக்கை காரணமாக நாளை பாடசாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

அதேபோல காஞ்சிபுரம், சென்னை மாவட்ட பாடசாலை , கல்லூரிகளுக்கும் நாளை திங்கள்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களை இந்திய பிரஜைகளாக அங்கீகரிக்க வேண்டும்! - உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்திய பிரஜைகளாக அங்கீகரிக்க வேண்டும் என உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

கரூர் - இரும்பூதிப்பட்டி அகதிகள் முகாமை சேர்ந்த டி. கணேசன் என்பவர் தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் இந்திய குடியுரிமை வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி மதுரை உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், மனுதாரரின் கோரிக்கையை பரிசீலிக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மனுதாரர் இந்திய குடியுரிமைக்காக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள், மனுதாரர் இந்திய குடிமகன் என்பதை நிரூபிக்க போதுமானதாக இல்லை என மத்திய உள்துறை செயலாளர் கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி தீர்ப்பளித்தார்.

இந்த உத்தரவை இரத்து செய்து தன்னையும், தனது குடும்பத்தினரையும் இந்திய பிரஜைகளாக அங்கீகரிக்கக்



கோரி கணேசனால் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களில் பெரும்பாலானோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்றனர் எனவும் தமிழகத்திலிருந்து 19 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு சென்றவர்கள் அந்நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து நாடற்றவர்களாக மாறி விட்டனர் என்றும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வாழும் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்களின் நலன் தொடர்பில் இந்தியா, இலங்கை இடையே 03 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், 1964 ஆம் ஆண்டில் முதல் ஒப்பந்தத்தில் இலங்கையிலிருந்து 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை இந்தியாவிற்கு திரும்ப அனுப்பி, அவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படும் எனவும்,

1974 ஒப்பந்தத்தில் ஒன்றரை இலட்சம் பேரில் 50 சதவீதம் பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கும் இணக்கப்பாட்டிற்கு அமைய, 75,000 பேரை இந்தியாவிற்கு திரும்ப அனுப்பி, இந்திய குடியுரிமை வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் 6 லட்சம் பேருக்கு இந்திய குடியுரிமை வழங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதுவரை 4 லட்சத்து 61 ஆயிரத்து 639 பேரின் இந்திய குடியுரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே, மனுதாரர் தரப்பில் பல்வேறு நியாயங்கள் உள்ளதாக சுட்டிக்காட்டிய உயர் நீதிமன்ற நீதிபதி சுவாமிநாதன், இந்திய குடியுரிமையை உறுதி செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிடவில்லை எனவும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருப்பதை நிறைவேற்ற வேண்டுமென்றே வலியுறுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

# செய்யறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி காஸாமீது தாக்குதல் நடத்தும் இஸ்ரேல்!



இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தம் முடிவிற்கு வந்து, மீண்டும் மோதல் ஆரம்பித்துள்ள நிலையில், இஸ்ரேல் செய்யறிவு (*AI*) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தாக்குதல் நடத்துவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நற்செய்தி (*Gospel*) என பெயரிடப் பட்டுள்ள இஸ்ரேலின் செய்யறிவு அமைப்பு தாக்க வேண்டிய இலக்குகளை உருவாக்க பயன்படுத்தப்படுகிறது.

*Gospel* முதன்முதலில் 2021 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற 11 நாள் போரில் பயன்படுத்தப்பட்டது. இயந்திர வழி கற்றல் மற்றும் மேம்பட்ட கணினி தொழில்நுட்பத்தின் மூலம் இராணுவத்திற்கான இலக்குகளை இது உருவாக்கிக் கொடுக்கும் திறன் கொண்டது.

உள்ளீடுகளின் அடிப்படையில் மிக விரைவாகவும் தானியங்கி முறையிலும் இலக்குகளை *Gospel* உருவாக்குகிறது.

ஹமாஸ், இஸ்லாமிக் ஜிகாத் என அறியப்பட்டவர்களின் செயற் பாட்டு தளங்கள், அவர்களால் பயன்படுத்தப்படும் தனி வீடுகள் ஆகியவற்றை செய்யறிவு அமைப்பு கண்டறிந்துவிடுகிறது.

இந்த நிலையில், ஒரு வார கால தற்காலிக போர் நிறுத்தம் முடிந்த நிலையில், இஸ்ரேலிய தாக்குதலில் காஸாவில் 178 பேர் உயிரிழந்துள்ளனர் என ஹமாஸ் சுகாதார அமைச்சு தெரி வித்துள்ளது.

ஆனால், இஸ்ரேல் இராணுவமோ ஹமாஸ் பதுங்கியிருக்கும் இடம் என அடையாளம் காணப்பட்ட 200 இடங்களை மட்டுமே குறிவைத்து தாக் குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளது.

# பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது







பிலிப்பைன்ஸில் 7.6 மெக்னிட்யூட் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

பிலிப்பைன்ஸின் மிண்டானா பகுதியில் 63 கிலோமீட்டல் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இதனையடுத்து, பிலிப்பைன ஸிலும் ஜப்பானிலும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி நள்ளிரவில் சுனாமி அலைகள் பிலிப்பைன்ஸை தாக்கக்கூடும் என்று பிலிப்பைன் ஸின் நில அதிர்வு ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

சிறிது நேரத்தின் பின்னர், 3 அடி உயரமான சுனாமி அலைகள் அதிகாலை 1:30 மணிக்கு ஜப்பானைத் தாக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# எரிவாயு விலையில் திருத்தம் வாராது!




சமையல் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 3,565 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

5 கிலோ கிராம் சமையல் எரிவாயு 1,431 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக லிட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


2.3 கிலோ கிராம் எரிவாயு விலை 668 ரூபாவாகும்.

இதேவேளை, தமது எரிவாயு விலைகளிலும் திருத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என லாஃப்ஸ் நிறுவனமும் அறிவித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோகிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 3,985 ரூபாவாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

5 கிலோ எடை கொண்ட லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 1,595 ரூபாவாகும்.






# நீதிவான்மார் அஞ்சுகின்றனர்!

## பொலிஸாரையும் ஆட்சியையும் பகைப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை என்கிறார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.03

பொலிஸாரையும் ஆட்சியையும் பகைக்கவும் விரும்பாத நீதிவான்மார் சரியான உத்தரவுகளைக் கொடுக்க அஞ்சுகின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

நீதியே இல்லாத நாட்டில் நீதி அமைச்சராக இருப்பதற்கு வெட்கமில்லையா எனவும் நீதி அமைச்சரைப் பார்த்து நாடாளுமன்றத்தில் வைத்து அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் இடம்பெற்ற – நீதி அமைச்சு தொடர்பான வரவு – செலவு விவாதத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ஆப்கானிஸ்தான் நாட்டின் கப்பல் போக்குவரத்து அமைச்சரைப் போன்றே எமது நாட்டின் நீதி அமைச்சர் உள்ளார் என நான் கூறுவது வழக்கம். இம்முறையாவது அதனை சொல்லாமல் விடுவமோ என்று நினைத்தால் கடந்த சில நாள்களாக இந்த நாட்டில் இடம்பெற்றவற்றொ பார்க்கும்போது நீதி இல்லாத நாட்டிலே ஒரு நீதி அமைச்சர் என்றே எனது பேச்சை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

நீதி இல்லாத நாடு எனச் சொல்வதற்கு பிரதான காரணம் நாட்டிலே வெவ்வேறு மக்களிற்கு வெவ்வேறு விதமாக சட்டங்கள் பிரயோகிக்கப்படுவது அப்பட்டமாகத் தெரிகின்றது. இதனைச் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை இல்லை.

வடக்கு கிழக்கிலே மரணித்தவர்களை நினைவு கூருகின்ற உரித்தை மரணித்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள், மற்றவர்களும் உபயோகப்படுத்துகின்றபோது அவர்களிற்கு ஏற்பட்ட சங்கடங்கள். பல. பொலிஸார் நீதிமன்றங்களை நாடினார்கள். நீதிமன்றங்களும் பொலிஸாரினுடைய கோரிக்கைக்கு இடமளித்துப் பழக்கமாகிவிட்ட நீதவான் நீதிமன்றங்கள். பல இடங்களிலே என்ன செய்வது என்று தெரியாமல் நீதுவான்கள் திக்குமுக்காடி இருந்தார்கள். குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் 106ஆம் பிரிவு வேறு, வேறு காரணங்களிற்காக சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்படியான விடயத்திற்கு அல்ல என்பதை பல ஆண்டுகளாக நான் இங்கேயும் சொல்லி வருகின்றேன். நீதிமன்றங்களிலும் சொல்லுகிறோம் .ஆனால் நீதிவான்மார் பயப்பிடுகின்றார்கள்.அதுதான் உண்மை. அதற்காக, (மக்களுக்கு) உரித்திருக்கின்றது என்பதும் அவர்களிற்கு தெரியும். ஆனாலும், பொலிஸாரையும் ஆட்சியையும் பகைக்கவும் விரும்பவில்லை. ஆகையினால் வேறு சில தடங்கல்களைப் போடுகின்றனர். நிபந்தனையை விதிக்கின்றனர்.

அந்தக் குறித்த சட்டம் இப்படியான ஒன்றிற்கு பொருத்தமே அற்றது என்று சொன்னால் அதை கண்டுகொள்கின்றார்கள் இல்லை. இந்தத் தடவை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்திலே மட்டும்தான் 7 ஏழு பொலிஸ் நிலையங்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு இப்படியான சட்ட ஏற்பாடு இந்த நினைவு கூரல் விடயத்திற்கு பொருத்தமற்றது என நீதவானே ஏற்றுக்கொண்டு, அத்தனை வழக்குகளையும் புறக்கணித்தார். மற்ற எல்லா நீதிமன்றங்களிலும் சில சில நிபந்தனைகளை விதித்தார்கள். இது பொருத்தமற்ற ஏற்பாடு என்பது எல்லோருக்கும் தெரியும். பொருத்தமற்ற ஏற்பாடு என்றால் அதற்குக் கீழ் இவ்வாறான விண்ணப்பங்களைப் பொலிஸார் செய்ய முடியாது. ஆகையினால் இப்படியாக நாட்டிலே வெவ்வேறு மக்களிற்கு சட்டம் வெவ்வேறு விதமாக உபயோகிக்கப்படுகின்றன.

கொழும்பிலே றோஹண விஜயவீரவின் படத்தை – அவர் சீருடையோடு தொப்பியும் அணிந்து செல்லுகின்ற படத்தை – வீதி, வீதியாக கொண்டு செல்ல முடிகின்றது. ஆனால் தங்களின் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர பலவிதமான நிபந்தனைகள். ஏன் இந்த நாட்டில் இரண்டு விதமாக சட்டங்கள் பாய்கின்றன? இது இனங்களிற்கு இடையில் மட்டுமல்ல, சமயங்களிற்கு இடையிலும் இருக்கின்றது.

போதகர் ஜெரோம் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவரை விளக்கமறியலில் வைக்கும்போது நீதிபதி சில கொமண்ட்டுகளையும் கூறியுள்ளார்.

ஆனால், அதேநேரம் மட்டக்களப்பைச் சேர்ந்த சுமணரத்ன தேரர் தாம் தமிழர்களைத் துண்டுதுண்டாக வெட்டுவார் என்று பகிரங்கமாக, வெளிப்படையாகப் பேசி உரை நிகழ்த்துகின்றார். அவர் கைது செய்யப்படவில்லை. விளக்கமறியலில் வைக்கப்படவில்லை. அவர் சட்டத்தை விட உயர்ந்த மனிதராகக் கருதப்படுகின்றார். இதுதான் இந்த நாட்டின் சாபக்கேடு.

ஆகையினால் இந்த நாட்டின் நீதி அமைச்சர் என்று தம்மைச் சொல்லிக் கொள்வதற்கு நீதி அமைச்சர் வெட்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் நீதி இல்லாதபோது இந்த நாட்டின் நீதி அமைச்சர் என்று உங்களைக் கூறிக் கொள்வதற்கு உங்களுக்கு எவ்வளவு துணிச்சல்? இங்கு பாகுபாடு வெளிப்படையாக – அப்பட்டமாக – தெரிகிறது.

ஆகவே உலகம் முழுவதும் போய் இலங்கையின் நீதியமைச்சர் என்று கூறுவது உங்களுக்கு சுமையான விடயமாக இருக்கும். – என்றார்.



# உலக நாடுகளின் தலைவர்களுடன் துபாயில் ஜனாதிபதி ரணில் பேச்சு





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலக நாடுகளின் தலைவர்கள் சிலரை நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் துபாயில் நடைபெறும் COP 28 எனப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்றுள்ள நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த கலந்துரையாடல்களில் பங்கேற்றுள்ளார்.

இதற்கமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மெக்ரோனை நேற்று சந்தித்துள்ளார்.

இதன்போது, இரு அரச தலைவர்களும் இருதரப்பு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை பசுமை பொருளாதாரத்தை நோக்கி கொண்டு செல்லுதல் மற்றும் இந்து சமுத்திரத்தின் RIM கூட்டமைப்புடனான பிரான்ஸின் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்திற்கு பிரான்ஸின் ஒத்துழைப்பை வழங்குமாறு, ஜனாதிபதி பிரான்ஸ் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக எக்ஸ் தளத்தில் இந்தியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரேசில் ஜனாதிபதி லூலா டி சில்வாவையும் நேற்று சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதனிடையே, காலநிலை மாற்றம் குறித்த பிரச்சினைகளுக்கு நீதியானதும் நியாயமானதுமான உணர்வுகளுடன் தீர்வு காண வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க COP 28 மாநாட்டில் “காலநிலை நீதிமன்றத்தை“ நேற்று முன்மொழிந்தார்.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் வேலைத் திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் இங்கர் அண்டர்சன் மற்றும் உகாண்டா சுகாதார அமைச்சர் கலாநிதி அஸெங் ஜேன் ருத் ஆகியோரின் ஆதரவுடன் ஜனாதிபதி குறித்த யோசனையை முன்மொழிந்தார்.



# வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் பங்கேற்க டயானா கமகே உள்ளிட்ட மூவருக்கும் அனுமதி

நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டிருந்தாலும், டயானா கமகே உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதம் மீதான வாக்கெடுப்பில் பங்குபற்ற முடியும் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் அனுமதியுடன் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மாத்திரம் அவர்கள் நாடாளுமன்றத்திற்கு வருகை தர முடியும் என அஜித் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கு இடையில் அண்மையில் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றம் நேற்று முற்பகல் அனுமதி வழங்கியது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பின் போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இந்த மோதல் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய் பெரேரா, ரோஹன பண்டார ஆகியோருக்கு ஒரு மாத காலத்திற்கு நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க தடை விதிப்பதற்கு நாடாளுமன்ற நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழு பரிந்துரைத்திருந்தது.

இந்த தீர்மானத்திற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக, சபை முதல்வரும் அமைச்சருமான கலாநிதி சுசில் பிரேமஜயந்த, அதனை நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தார்.

இதன்போது, இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளே நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

டயானா கமகேவிற்கு மூன்று மாத கால நாடாளுமன்ற தடையும், ஏனைய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலா இரண்டு வார கால நாடாளுமன்ற தடையும் விதிக்கப்பட வேண்டுமென சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட குழு பரிந்துரைத்திருந்தது.

இதனையடுத்து, ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே வாதப்பிரதிவாத நிலைமை ஏற்பட்டது.

இதன்போது, ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வாக்கெடுப்பைக் கோரிய நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர்.

வாக்கெடுப்பின் போது நாடாளுமன்ற நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவாக 57 வாக்குகள் அளிக்கப்பட்டமையுடன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அதற்கு எதிராக வாக்களித்தார்.

மேலும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நிறுவன ஒப்பந்த நிபந்தனைகளை நன்கு அறிந்து கையொப்பமிடுங்கள்

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

எந்தவொரு நிதி நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் சேவைகளுக்காக அந்த நிறுவனங்களினால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைகளை நன்கு அறிந்து கையொப்பமிடுமாறு இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் சுஜிதா ஜெகஜீவன் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சில நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் ஒப்பந்தங்களை நன்கு அறியாமல், அதற்கு சிலர் ஒப்புதலை வழங்குகின்றனர்.

ஆகையால் எந்தவொரு நிதி நிறுவனங்களின் ஆவணங்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் ஒப்பந்தங்களை அறிந்துக்கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

# 48 மணிநேரத்துக்கு கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம்!

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல்

மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரங்களுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்பரப்புகளில் எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு மீன்பிடிக்க செல்வதை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது இந்தக் கடற்பிராந்தியங்களுக்கு சென்றுள்ள மீனவர்கள் மற்றும் கடற்பயணம் மேற்கொள்வோர் உடனடியாக கரைக்குத் திரும்ப வேண்டும் அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வங்காள விரிகுடாவில் நிலவும் குறைந்த தாழமுக்கம் வலுவடைவதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தாழமுக்கமானது நேற்று காலை 05.30 அளவில் திருகோணமலையில் இருந்து வடகிழக்காக 380 கிலோமீட்டர் தொலைவில் நிலைகொண்டிருந்தது.

இன்று அது சூறாவளியாக வலுவடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, வடக்கு, வடமத்திய, கிழக்கு, வட மேல் மாகாணங்களில் 100 மில்லிமீற்றர் வரையான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வட மேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வரையான வேகத்தில் கடும் காற்று வீசக்கூடுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, பதுளை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.



# பல்கலைக்கு மாணவர் சேர்ப்பு அடுத்த மாதத்தில் தொடங்கும்

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
UNIVERSITY GRANTS COMMISSION

2022 - 2023 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகங்களில் மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முதற்கட்டத்தில் 42 ஆயிரத்து 145 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இம்முறை கலைப்பீடத்திற்கு அதிகளவான மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அந்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 780 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதி செயலாளர் ஷாலிகா ஆரியரத்ன தெரிவித்துள்ளார் .

எதிர்வரும் 02 வாரங்களுக்குள் பல்கலைக்கழக அனுமதிக்கான பதிவு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாகவும், மாணவர்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி, அதனூடாக தேவையான ஆலோசனைகளை வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2022 கல்வி பொது தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக, பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.




# சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் முதல் மீளாய்வு எதிர்வரும் 12ஆம் திகதி

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் முதல் மீளாய்வு எதிர்வரும் 12ஆம் திகதி, அந்த நிதியத்தின் நிறைவேற்று சபையில் பரிசீலிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கிப்படுகிறது.

உத்தியோகபூர்வ கடன் வழங்கும் நாடுகள் கடந்த வாரம் வழங்கிய உறுதியை அடுத்து இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவு இந்த மாத இறுதிக்குள் எட்டப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் சிலவற்றை மாத்திரமே ஈடு செய்திருந்தது.

அதற்கமைய, பல மாற்றங்களையும் இலங்கை கோரியிருந்தாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எனினும், பணவீக்கம் உட்பட சில இலக்குகளை இலங்கை அடைந்துள்ளது.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் முதற்கடன் தவணை கடந்த மார்ச் மாதம் கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து, கடந்த செப்டம்பர் மாதம் இரண்டாம் தவணைக்கடன் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் எனக் குறிப்பிடப்பட்டது.

எனினும், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு அமைய அதன் இலக்குகள் சிலவற்றை இலங்கை நிறைவேற்ற தவறியது.

இந்தநிலையில், இலங்கைக்கான இரண்டாம் தவணைக்கடன் வசதி இந்த மாத இறுதிக்குள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# நாடு முழுவதிலும் பாடசாலைகளில் 22 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள்


நாடளாவிய ரீதியில் 22 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களுக்கு பொருத்த மானவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, ஆசிரியர்கள் ஓய்வு பெற்றமையினால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்குரிய பாடங்களுக்கான ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளின் கீழ் காணப்படும் பாடசாலைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் காணப்படும் பாடசாலைகளுக்காக இவ்வாறு ஆள் சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பாடசாலை தவணையின் போது ஆள்சேர்ப்பு நடவடிக்கையை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.



# கற்பிட்டி பகுதியில் ஒன்றரைக் கோடி ரூபா நகை, பணம் ஆயுதமுனையில் கொள்ளை!

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவக்கடுவ, கொலனி பிரதேசத்தில் உள்ள பிரபல மரக்கறி விற்பனையில் ஈடுபடும் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் ஆயுத முனையில் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாவக்காடு – கொலனி பகுதியில் உள்ள அந்த வர்த்தகரின் வீட்டிற்கு நேற்றுக் காலை கைத்துப்பாக்கிகள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இந்த ஆயுதக் கும்பல் முதலில் அங்கிருந்த தொழிலதிபரையும், அவரது மனைவி உட்பட குடும்பத்தினரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர் எனக் கூறப்படுகிறது.

ஆயுதக் குழுவினர், அவர்களைக் கொலை செய்யப் போகிறார்கள் என மிரட்டியமையுடன், வீட்டில் இருந்த பாதுகாப்பு பெட்டகத்தை வலுக்கட்டாயமாக திறந்துள்ளனர் என மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, வீட்டின் பாதுகாப்புப் பெட்டகத்தில் இருந்த சுமார் 70 பவுண் தங்க நகைகள் மற்றும் 30 லட்சம் ரூபா பணம் என்பனவற்றை கொள்ளையடித்த ஆயுதக் குழுவினர், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.




# வெடிக்காத மோட்டார் ஷெல்கள் எழுதுமட்டுவாள் பகுதியில் மீட்பு





(த.சுபேசன்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் வெடிக்காத நிலையில் மூன்று மோட்டார் ஷெல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தோட்டக் காணி ஒன்றைத் துப்பரவு செய்த போதே மேற்படி ஷெல்கள் அடையாளம் காணப்பட்டன. இது தொடர்பாக காணி உரிமையாளரினால் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு வெடிபொருள்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 03.12.2023

## மேஷம்

உங்கள் பொறுப்புகளை திறமையாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். பொறுமை காப்பது நல்ல பலனைத் தரும். விரைவாக முடிவெடுக்க முனைவீர்கள். இந்த உணர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் திறமையான முறையில் பணியாற்ற பணிகளை நன்கு கையாள வேண்டும். முன்கூட்டி திட்டமிட்டால் செயலில் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப் படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். மனம் திறந்த பேச்சும் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலமும் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணம் குறைந்து காணப்படும். குடும்பத் திற்காக பணம் செலவு செய்ய நேரும். பணத்தை சேமிக்க இயலாது.

## ரிஷபம்

இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக் கும். இன்று எடுக்கும் சிறந்த முடிவுகள் வளர்ச்சி பெற உதவும். நீங்கள் உறுதி யுடனும் உற்சாகத்துடனும் காணப்படு வீர்கள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் ஒளிவு மறைவின்றி பேசுவீர் கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று பாதுகாப்பாக இருக்க சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்கள் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.

## மிதுனம்

இன்றைய நாள் சாதகமான பலன் களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறை யாக பராமரிக்க வேண்டும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

## கடகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய கடினமாக உழைக்க வேண்டும். அனைத் தையும் பொறுமையாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணிச்சுமைகள் கவலையை அளிக் கும். சக பணியாளர்களிடம் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதால் கவனமாக உரையாட வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். இம்மாதிரி அணுகுமுறையால் நீங்கள் நல்ல புரிந்து ணர்வை பராமரிக்க முடியும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.

## சிம்மம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். அனுசரை யான போக்கை மேற்கொள்ளுங்கள்.

இன்று பணிகள் கடினமாக காணப் படும். கூடுதல் பணிகள் காரணமாக அதிக நேரம் பணி செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது. உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகி னால் இந்த நாளை இனிமையாக ஆக்கலாம்.

இன்று பண வரவு காணப்படாது. பணப்பற்றாக்குறை காரணமாக கவலை ஏற்படும்.

கீழே விழுந்து அதனால் பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்று சாதகமான நாள். வெற்றி கரமான பலன்கள் கிடைக்கும். உங்க ளின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டா லும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வ மான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## துலாம்

இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்களின் நம்பிக்கை யான போக்கு காரணமாக பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் பலன்கள் கிடைப் பது உறுதி. உங்கள் நேர்மையான முயற்சி மேலதி காரிகளின் பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் செயல்திறனின் தரம் மேம்படும்.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இன்றைய நாளை ஒன்றாக இணைந்து கொண்டாடி திருப்தியடைவீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது. உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்கு வீர்கள்.

இன்று ஆற்றல் அதிகமாகக் காணப்படும்.

## விருச்சிகம்

இன்று சாதகமான நாளாக அமை யாது. மனதை ஓய்வாகவும் அமைதி யாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகு முறையும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்பட லாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று சிறிது பதட்டமாக காணப்படுவீர்கள். பாது காப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜபங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.12.2023


தனுசு

இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். என்றாலும் உங்கள் பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு கொண்டு இன்றைய நாளை வெற்றிகரமாக ஆக்குவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பயணத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்படும் என்பதால் இனிமையான பயணமாக இருக்காது.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பழக வேண்டும். நல்ல உறவை பராமரிக்க சிறந்த அணுகுமுறை தேவை.

வரவும் செலவும் இணைந்து காணப்படுகின்றது. நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை அனுபவிக்க இயலாது.

இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள்.


மகரம்

இன்று லாபகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். நீங்கள் சிறந்த தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

திறமையாகப் பணியாற்றி அதற்குரிய அங்கீகாரம் பெறுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் உல்லாசமாக பழக வேண்டும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன்று திடமாகவும் சௌகரியமாகவும் உணர்வீர்கள்.


கும்பம்


உங்கள் முயற்சிகளில் வளர்ச்சியும் வெற்றியும் காணப்படும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகையில் இன்றைய நாள் சுமுகமாக இருக்கும்.

உங்களின் அருமையான செயல் திறன் மூலம் உங்களுக்கு வெகுமதியும் அங்கீகாரமும் கிடைக்கும். உங்களின் புத்திசாலித்தனம் மற்றும் சிறந்த செயல் மூலம் வெற்றிக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். இதனால் அவருக்கு உங்கள் மீது நம்பிக்கை பெருகும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. இன்று உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று ஆற்றல் மிக்க மன நிலை காணப்படும். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.


மீனம்

இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகுமுறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பதட்டமாக காணப்படுவீர்கள். தியானம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.








# றக்பியில் அம்பாறை சேனநாயக்கவை வீழ்த்தியது பண்டாரவளை புனித தோமஸ்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை சேனநாயக்க தேசிய கல்லூரிக்கு எதிரான றக்பி போட்டியில் பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரி வெற்றிபெற்றது.

அம்பாறை டீ.எஸ். சேனநாயக்க தேசிய கல்லூரியில் றக்பி விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் முதன் முதலாக றக்பி போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இப்போட்டி பண்டாரவளையில் நடைபெற்றது.

இதில், அம்பாறை டீ.எஸ்.சேனநாயக்க தேசிய கல்லூரியும், பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரியும் கலந்துகொண்டன.

இப்போட்டியில், பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரி 53 புள்ளிகளால் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் பிரதம அதிதியாக அயிஸ்லபி எஸ்டேட் நிறுவனத்தின் முகாமையாளர் லஸந்த எதிநிவீர கலந்து கொண்டார்.



